# தமிழகத்தின் தொன்மை வரலாறு

(தஞ்சாவூர் புத்தகத் திருவிழா 2019 - சமயத்தில் வெளியிடப்பெறும்
மாணவர்கள், பொதுமக்களுக்கான
மின்னணுக் கையேடு)

# Ancient History of Tamil Nadu

e-brochure

**தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்**

**ஆகஸ்ட் 2019**

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| *1.* | அறிமுகம் | *3* |
| *2.* | காலக்கோடு | *4* |
| *3.* | தொல்பழங்காலம் | *5* |
| *4.* | புதிய கற்காலம் | *8* |
| *5.* | இரும்புக்காலம் | *9* |
| *6.* | வரலாற்றுத் தொடக்க காலம் | *11* |
| *7.* | தமிழ் எழுத்துக்களின் வளர்ச்சி | *15* |
| *8.* | கண்காட்சி அமைப்பு | *16* |

# 1. அறிமுகம்

*தமிழ்ப் பல்கலைக்கழகம் கல்விப் பணிகள், ஆய்வுப் பணிகள் மட்டுமின்றி பொது மக்களுக்குத் தமிழ் மொழியின் சிறப்பு, தமிழக வரலாற்றின் தொன்மை ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் பல பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.*

*தஞ்சாவூர் மாவட்ட நிருவாகமும், தஞ்சாவூர் கிங்ஸ் ரோட்டரி சங்கமும், தென்னிந்திய புத்தக விற்பனையாளர்கள் மற்றும் பதிப்பாளர் சங்கமும் இணைந்து நடத்தும் தஞ்சாவூர் புத்தகத் திருவிழா 2019 நடைபெறும் சமயத்தில், பொதுமக்களும் மாணவர்களும் பயன்பெறும் வண்ணம் தமிழகத்தின் தொன்மை வரலாறு குறித்த ஒரு சிறிய மின்னணுக் கையேட்டைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் வெளியிடுகின்றது.*

*தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் நூல்கள் இக்கண்காட்சியில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் பழங்கால வரலாறு குறித்த ஒரு சிறிய கண்காட்சியைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறையினர், கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறையினர், மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளனர்.*

*இக் கையேடு தமிழக வரலாறு குறித்த சில அடிப்படைத் தகவல்களை அளிக்கின்றது. இது மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் பயனுள்ளதாக இருக்கும் என நம்புகிறேன்.*

*இக் கண்காட்சியை ஏற்பாடு செய்த தமிழ்ப் பல்கலைக்கழகப் பணியாளர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோருக்கு எனது வாழ்த்துக்கள்.*

***முனைவர் கோ. பாலசுப்பிரமணியன்***
*துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்*

# உ. தமிழக வரலாறு - காலக்கோடு

# History of Tamizhagam -Timeline

| பண்பாட்டுக்காலம் | காலம் | பண்பாட்டுக் கூறுகள் |
|---|---|---|
| தொல்பழங்காலம்<br>அ.கீழைப் பழங்கற்காலம்<br>ஆ.இடைப் பழங்கற்காலம்<br>இ.மேலைப் பழங்கற்காலம் | சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து சுமார் 10000 ஆண்டுகளுக்கு முன் வரை | வேட்டையாடி உணவு சேகரிப்பு. கைக்கோடரி, உள்ளிட்ட அழகிய கற்கருவிகள் உருவாக்கம். |
| நுண்கற்காலம் | சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து சுமார் 3000 ஆண்டுகள் வரை | வேட்டையாடி உணவு சேகரித்தவர்கள். மிகச் சிறிய நுண்கற்கருவிகள் உருவாக்கம். கூர்முனை, முக்கோண, டிரபீசியக் கருவிகள் |
| புதிய கற்காலம் | சுமார் 4,000 ஆண்டுகளுக்கு முன்பிருந்து சுமார் 3000 ஆண்டுகள் வரை | வேளாண்மை செய்தல். ஆடு-மாடு வளர்த்தல். பானைகள் வனைதல். |
| இரும்புக்காலம் | சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்பிருந்து | இரும்புக் கருவிகள் செய்து, வேளாண்மை, ஆடு-மாடு வளர்த்த மக்கள். கறுப்பு-சிவப்பு பானைகள் வனைதல் |
| வரலாற்றுத் தொடக்க காலம் அல்லது சங்க காலம் | பொ.ஆ.மு. 500 முதல் பொ.ஆ 300 வரை | தமிழி-தமிழ் பிராமி எழுத்தின் தோற்றம் -சங்க இலக்கியப் பாடல் உருவாக்கம். நகரமயமாக்கம். சங்க கால அரசுகள். கடல்கடந்த வணிகத் தொடர்புகள் |
| முன்னிடைக் காலம் | 300- 850 பொ.ஆ. | களப்பிரர் ஆதிக்கம்-பௌத்த-சமண சமயங்களின் பரவல்- பல்லவர் ஆட்சி - சோழர்களின் எழுச்சி. பக்தி இயக்கம். அரசுகளின் வளர்ச்சி. குடைவறை, கட்டுமானக் கோயிற் கட்டடக் கலை வளர்ச்சி |
| இடை இடைக் காலம் | 850-1300 பொ.ஆ. | பல்லவர் ஆட்சி வீழ்ச்சி சோழப் பேரரசு உருவாக்கம் - சோழர்களின் கடல் கடந்த ஆதிக்கம்-பாண்டியர்கள் ஆட்சி- கோயிற் கட்டடக் கலை வளர்ச்சி |

| | | |
|---|---|---|
| பின்னிடைக் காலம் | 1300-1600 பொ.ஆ. | பாண்டியர், விஜய நகர, நாயக்கர் ஆட்சி - கோயிற் கட்டடக் கலை வளர்ச்சி |
| நவீன காலம்/ காலனியாதிக்க காலம் | 1600-1947 பொ.ஆ. | ஐரோப்பியர் வருகை- இந்திய விடுதலைப்போராட்டம் |
| சம காலம் | 1947-முதல் | மக்களாட்சியின் தொடக்கம் |

## 3. தொல்பழங்காலம்

தமிழகத்தில் கீழைப் பழங்கற்கால (Lower Palaeolithic) மனிதர்கள் சுமார் 15 லட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கம் உள்ளிட்ட கொற்றலை ஆற்றுப்படுகையில் வாழ்ந்துள்ளனர் . இவர்கள் கற்கோடரிகளையும் வெட்டுக் கருவிகளையும் பயன்படுத்தி வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்திருந்தனர்.

தமிழகத்தில் சுமார் 3.85 லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் 1.72 லட்சம் ஆண்டுகள் வரை இடைப் பழங்கற்கால மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இக்காலத்தில் கீழைப்பழங்கற்காலத்தை விடச் சிறிய கற்கருவிகள் பயன்பாட்டில் இருந்துள்ளன.




*Photo: R. Ragu, The Hindu*

இராபர்ட் புரூஸ் பூட் 1863-ல் சென்னைக்கருகே கண்டுபிடித்த பழங்கற்காலக் கருவிகள்





*சர் இராபர்ட் புரூஸ் பூட் - இந்தியத் தொல்பழங்கால ஆய்வின் தந்தை*




*பழங்கற்காலக் கருவிகள் -மதுரை மாவட்டம்*

*இடைப் பழங்கற்காலத்தைத் தொடர்ந்து மேலைப் பழங்கற்காலத்தில் பலவிதமான கருவிகளைச் செய்து வேட்டையாடி வாழ்ந்துவந்தனர். இடைக்கற்காலம் எனப்படும் நுண்கற்காலம் சுமார் 10,000 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கியது. இக்கால மக்கள் வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்து வந்தனர். இக்காலச் சான்றுகள் தஞ்சாவூர், அரியலூர், சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி பகுதிகளில் காணப்படுகின்றன. கூர்முனைகள், சுரண்டிகள், முக்கோண, பிறைவடிவக் கருவிகளை மரக்குச்சிகளில் பதித்து ஈட்டி, வில்-அம்புகளை உருவாக்கி வேட்டையாடப் பயன்படுத்தினர் .*






*தொல்பழங்கால வேடர்கள்*
*ஜான் டேவிஸ், விக்கிமீடியா காமன்ஸ்*

*நுண்கற்கருவிகள்-மதுரை மாவட்டம்*

## *உங்களுக்குத் தெரியுமா?*

1. *இந்தியாவின் முதல் பழங்கற்காலக் கருவி எங்கு கண்டுபிடிக்கப்பட்டது?*
   *பல்லாவரம். 1863 ல் இராபர்ட் புரூஸ் பூட் அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது .*


2. *கொற்றலையாறு தமிழகத்தில் எங்கு ஓடுகின்றது?*
   *சென்னைக்கு அருகில்.*

# 4. புதிய கற்காலம்

*புதிய கற்காலத்தில் மனிதர்கள் வேளாண்மை செய்யத் தொடங்கினர். ஆடு-மாடுகளை வளர்த்தனர். பலவகையான தானியங்களை விளைவித்தனர். தமிழகத்தில் புதிய கற்காலச் சான்றுகள் பையம்பள்ளி, தருமபுரி, கிருஷ்ணகிரி பகுதிகளில் கிடைக்கின்றன. இவை சுமார் 4000 முதல் 3500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை ஆகும்.*



*புதியகற்காலக் கருவி*




*கைப்பிடியில் பதிக்கப்பெற்ற மெருகேற்றப்பட்ட கோடரி*

*நன்றி:* Louis Laurent Gabriel de Mortillet

### உங்களுக்குத் தெரியுமா?

1. *தென்னிந்தியாவின் புதிய கற்கால ஊர்களின் சிறப்பு என்ன?*
   *பல புதிய கற்கால ஊர்களில் சாம்பல் மேடுகள் காணப்படுகின்றன.*
   *இவற்றை கர்நாடகாவில் கொடெக்கல், குப்கல் ஆகிய ஊர்களில் காணலாம்.*

2. *தமிழகத்தில் புதியகற்காலச் சான்றுகள் எந்தப் பகுதியில் அதிகமாகக் காணப்படுகின்றன?*
   *தமிழகத்தின் வடமேற்குப்பகுதியில்.*
   *எ.கா. பையம்பள்ளி*

# 5. இரும்புக்காலம் - பெருங்கற்காலம்

இரும்புக்கால மக்கள் வேளாண்மை, ஆடு-மாடு வளர்ப்பு, வேட்டையாடுதலில் ஈடுபட்டனர். இவர்கள் ஏரிகளை உருவாக்கினர். இரும்பின் பயனை அறிந்திருந்தனர். இறந்தவர்களுக்கு ஈமச்சின்னங்களை எழுப்பினர். தமிழகத்தில் சுமார் 3200 ஆண்டுகளுக்கு முன்னர் இரும்புக் காலம் தொடங்கியது. சமூக வளர்ச்சி ஏற்பட்டு சங்க காலச் சமூகத்திற்கு அடித்தளமாக இரும்புக் காலம் விளங்கியது.

இக்காலத்தில் இறந்தவர்களைத் தாழிகளிலும், குடைவறைகளிலும், ஈமப்பேழை களிலும் புதைத்தனர். இக்காலப் பானைகள் உட்புறம் கருப்பாகவும், வெளிப்புறம் சிவப் பாகவும் இருந்தன.



கற்பதுக்கை (Cist), கொடுமணல்



கொடுமணல்: ஈமச்சின்னத்தில் கிடைத்த செம்மணிகள் (கார்னீலியன்)



பத்மாசன நிலையில் இருந்த ஒரு மனிதனின் எலும்புக்கூடு, கொடுமணல்





செம்பால் செய்யப்பட்ட புலி உருவம் (கார்னீலியன் கற்கள் பதிக்கப்பட்டது), கொடுமணல்



கருப்பு-சிவப்புப் பானைகள்- ஆதிச்சநல்லூர்



நெடுங்கல்
(Menhir)



ஈமத்தாழிகள், ஆதிச்சநல்லூர்

படங்கள்: நன்றி கா.ராசன் -
இந்திய அரசு தொல்லியல் துறை



பானையின் மீது பலவித
ஒட்டுருவங்கள், ஆதிச்சநல்லூர்

**உங்களுக்குத் தெரியுமா?**

1. இரும்புக்கால மக்கள் எந்த வகையான பானைகளைப் பயன்படுத்தினர்?
   கறுப்பு, சிவப்பு, கறுப்பு-சிவப்பு.

2. தமிழகத்தில் புதியகற்காலச் சான்றுகள் எந்தப் பகுதியில் அதிகமாக காணப்படுகின்றன?
   தமிழகத்தின் வடமேற்குப்பகுதியில்.

# 6. வரலாற்றுத் தொடக்க காலம் - சங்க காலம்

மனிதர்கள் எழுத்தைக் கண்டுபிடித்த காலம் வரலாற்றுத் தொடக்க காலமாகும். தமிழகத்தில் இக்காலம் சங்க காலம் என்றழைக்கப்படுகின்றது. தமிழி (தமிழ்-பிராமி) எனப்படும் எழுத்து இக்காலத்தில் பயன்பாட்டில் இருந்தது. இது சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கியது. சங்க இலக்கியங்கள் உருவாயின.

இக்காலத்தில்தான் முதல் நகரமயமாக்கம் (urbanization) தோன்றியது. செங்கற்கள், கூரை ஓடுகள் பயன்படுத்தி கட்டடங்கள் கட்டப்பட்டன. உறையூர், காவிரிப்பூம்பட்டினம், மதுரை, அரிக்கமேடு, கரூர், முசிறி போன்ற பெரு நகரங்கள் தோன்றின. தமிழகம் ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதல் தென்கிழக்காசியா வரை வணிகத் தொடர்பு கொண்டிருந்தது.

யவனர்கள் எனப்படும் ரோமானியர் உள்ளிட்ட மேலைநாட்டினர் தமிழகத்திற்கு வருகை புரிந்தனர். தமிழர்கள் கடல் கடந்து வணிகத்திற்காகப் பயணித்தனர்.



*கீழடி அகழாய்வில் வெளிப்பட்ட செங்கற்கட்டுமானங்கள்*
*நன்றி: இந்திய அரசு தொல்லியல் துறை*



*கீழடியில் அகழப்பட்ட உறை கிணறு, நன்றி: இந்திய அரசு தொல்லியல் துறை*



ரோமானிய மதுச்சாடிகளின் மாதிரிகள், பட்டணம், கேரளா
நன்றி: கேரள வரலாற்றாய்வுக் கழகம்


***சங்க இலக்கியத்தில் ரோமானியர் குறித்த செய்தி :***

***''யவனர் தந்த வினைமான் நன்கலம்***
***பொன்னொடு வந்து கறியொடு பெயரும்***
***வளங்கெழு முசிறி''*** *அகநானூறு 149*



''பெரும்பதன் கல்'' தாய்லாந்தில் கிடைத்த
தமிழி எழுத்துப்பொறிப்புள்ள கல்
நன்றி:பூன்யரித் சாய்சுவான்








ṇa-n-tai- kī-ra-ṉ
ண-ந்-தை- கீ-ர-ன்

ஓமானில் கோர்ரோரி என்ற இடத்தில்
கிடைத்த தமிழ் பிராமி எழுத்துப்
பொறிப்பு
நன்றி: அலெக்சியா பவன்





க ல்
kal



பேடுதீயன் அந்தவன்
pēṭutīyaṉ antavaṉ



கூடல் ஊர் ஆகோள்
kūṭal ūr ā kōḷ

புலிமான்கோம்பை (புள்ளிமான்கோம்பை)
நடுகல் நன்றி: கா. இராசன்



*சங்க காலச் செங்கற் கட்டடம், பட்டணம், கேரளா.*
*நன்றி: கேரள வரலாற்றாய்வுக் கழகம்*



*''பனை ஒறி'' பெயருள்ள*
*பானையின் துண்டு,*
*குசேர் அல் காதிம், எகிப்து*
*நன்றி: கே ரொபர்ட்டா டாம்பர்*


## *உங்களுக்குத் தெரியுமா?*

1. *பியூட்டிங்கேரியன் அட்டவணை என்பது ன்ன?*
   *இது பழந்தமிழகத்தைக் காட்டும் மிகப் பழமையான ரோமானிய நிலப்படம் ஆகும். இதில் இந்திய, தமிழக நிலப்பகுதிகள், துறைமுகங்கள் சுட்டப்பெறுகின்றன.*

2. *வியன்னா பாப்பிரஸ் என்றால் என்ன?*
   *ஆஸ்திரியாவில் உள்ள வியன்னாவில் உள்ள அருங்காட்சியகத்தில் உள்ள பாப்பிரஸ் தாளில் எழுதப்பட்ட ஆவணம். இது பழந்தமிழகத்தின் முசிறி துறைமுகத்திலிருந்து நடைபெற்ற வணிகத்தைப் பற்றிக் கூறுகின்றது.*

# 7. தமிழ் எழுத்துகளின் வளர்ச்சி



# 8. கண்காட்சி அமைப்பு

- கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை
- கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
- அருங்காட்சியகம்

*ஒருங்கிணைப்பு:* ***முனைவர் வீ.செல்வகுமார்,***
*கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை*

*படங்கள் - எழுத்து அட்டவணை:*

***பேராசிரியர் பா.ஜெயக்குமார்,***
*தலைவர், சுவடிப்புலம் - கல்வெட்டியல், தொல்லியல் துறை*

***முனைவர் மா. பவானி,***
*உதவிப் பேராசிரியர், கல்வெட்டியல், தொல்லியல் துறை*

*நிகழ்ச்சி ஏற்பாடு:*

***முனைவர் ஆ. ராஜா,***
*அருங்காட்சியகக் காப்பாளர்,*
*தமிழ்ப் பல்கலைக்கழக அருங்காட்சியகம்*

***முனைவர் செ.கௌரிசங்கர்,***
*கௌரவ உதவிப் பேராசிரியர்,*
*கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை*

***முனைவர் அ. சங்கர்,***
*கௌரவ உதவிப் பேராசிரியர்,*
*கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை*

*உதவி:* ***திரு. இரா. கார்த்திகேயன்***